


**14.05.2025**

**தலைப்பு செய்திகள்**

**1. குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்முவிடம்** ஆபரேஷன் சிந்தூர் தாக்குதல் நடைமுறைகளை முப்படைத்தலைவர்கள் இன்று எடுத்துரைத்தனர்.

2. **ஆபரேஷன் சிந்தூர் துல்லிய தாக்குதல் திறன்மிகு** ராணுவ வெற்றி என்று அமெரிக்கா பாராட்டியுள்ளது.

**3. 6-ஜி தொழில்நுட்பத்தில் முன்னோடி நாடாக** விரைவில் இந்தியா உருவெடுக்கும் என்று மத்திய அமைச்சர் திரு. சந்திரசேகர் பெம்மசானி தெரிவித்துள்ளார்.

4. **உதகை அரசு மருத்துவகல்லூரி** மருத்துவமனைக்கு தேவையான வசதிகள் உடனடியாக செய்துதரப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

5. **தாய்லாந்து ஓப்பன் பேட்மிட்டன் மகளிர் ஒற்றையர்** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு ஆகர்ஷி கஷ்யப், உன்னத்தி ஹூடா ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖❖❖❖

**முப்படை தளபதிகள்**

**குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்முவை** முப்படைத்தலைவர்கள் இன்று சந்தித்து ஆபரேஷன் சிந்தூர் தாக்குதல் குறித்து அவரிடம் எடுத்துரைத்தனர்.

முப்படைகளின் தளபதி ஜென்ரல் அனில் சௌஹான், ராணுவ தளபதி ஜென்ரல் உபேந்திர திவேதி, விமானப்படைத்தலைவர் ஏர்சீப் மார்ஷல் ஏ.பி.சிங், கடற்படை தலைவர் அட்மிரல் தினேஷ் கே. திரிபாதி ஆகியோர் குடியரசு தலைவரை சந்தித்து பேசினர்.

தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் தக்க பதிலடி வெற்றிகரமாக அமைந்ததற்கு முப்படைகளின் வீர தீரமும், துணிச்சலும் இன்றியமையா பங்காற்றியதாக குடியரசு தலைவர் பாராட்டினார்.

❖❖❖❖❖❖❖❖❖

**ஜான்ஸ் ஸ்பென்சர்**

**நம்நாட்டின் ஆபரேஷன் சிந்தூர் துல்லிய** தாக்குதல் திறமையான ராணுவ வெற்றி என்று அமெரிக்காவை சேர்ந்த பழம்பெரும் ராணுவ வீரர் ஜான்ஸ் ஸ்பென்சர் தெரிவித்துள்ளார்.

முன் எப்போதும் இல்லாத வகையில் பஹல்காம் தீவிரவாத தாக்குதலை தொடர்ந்து இந்தியா தாமதிக்காமல் உடனடியாக தக்க பதிலடியை வழங்கியதாக அவர் கூறியுள்ளார்.

இந்த தாக்குதல் திட்டம் துல்லியமானது என்றும், நுணுக்கமாக திட்டமிடப்பட்டுள்ளதாகவும் எடுத்துரைத்த அவர், அணு அச்சுறுத்தலுக்கு எதிராக உறுதியுடன் நின்ற பிரதமர் திரு. நரேந்திரமோடியின் நிலைப்பாடையும் பாராட்டியுள்ளார்.

இத்தகைய தீவிரவாத அச்சுறுத்தல்களை இந்தியா பொறுத்துக்கொள்ளாது என்ற வலுவான செய்தி உணர்த்தப்பட்டிருப்பதாக குறிப்பிட்டார்.

பழிவாங்குவதற்காக அல்லாமல், இந்தியாவின் பதிலடி தாக்குதல் முறை வெற்றியடைந்ததாகவும் சுட்டிக்காட்டினார்.

4 நாட்கள் நடத்தப்பட்ட திட்டமிட்ட ராணுவ செயல்பாடுகள் இந்தியாவிற்கு மாபெரும் வெற்றியை ஏற்படுத்தி தந்ததாக அவர் கூறினார்.

ஆபரேஷன் சிந்தூர் மூலமான நிலைப்பாடுகளால் தீவிரவாத கட்டமைப்புகள் தகர்க்கப்பட்டு, தனது ராணுவத்தின் சிறப்பை இந்தியா பறைசாற்றியுள்ளதாக அவர் கூறினார்.

இந்தியாவின் வெற்றி அதன் பன்முகத்திறன் கொண்ட பல அடுக்கு பாதுகாப்பு முறைகளை புலப்படுத்தி இருப்பதாக ஆஸ்திரிய நாடும் பாராட்டு தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖

**பூர்ணம் குமார் ஷா**

**பஞ்சாப் மாநிலம் பெரோஸ்பூர் பகுதியில்** சென்றமாதம் 23-ம் தேதி சர்வதேச எல்லையை தவறுதலாக தாண்டியதால், பாகிஸ்தான் படையினரால் கைது செய்யப்பட்ட எல்லை பாதுகாப்பு படைவீரர் பூர்ணம் குமார் ஷா இன்றுகாலை இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அம்ரித்சரில் உள்ள அட்டாரி சோதனை சாவடியில் உரிய நடைமுறைகளுடன் அவர் இந்தியா திரும்பியுள்ளார்.

எல்லை பகுதியில் விவசாயிகளின் பாதுகாப்பு பணியில் அவர் ஈடுபட்டிருந்த போது தவறுதலாக பாகிஸ்தான் எல்லைக்குள் சென்றதால் அந்நாட்டு படைகளால் அவர் கைது செய்யப்பட்டார்.

❖❖❖❖❖❖❖❖

**ரந்திர் ஜெய்ஷ்வால்**

**அருணாச்சல பிரதேச மாநிலத்திற்கு உட்பட்ட சில** பகுதிகளில் புதிய பெயர்களை சூட்ட முயலும் சீனாவின் தொடர்முயற்சிகள் முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது என்று இந்தியா திட்டவட்டமாக கூறியுள்ளது.

இதுதொடர்பாக ஊடகங்களின் கேள்விகளுக்கு பதிலளித்துள்ள மத்திய வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு. ரந்திர் ஜெய்ஷ்வால், அருணாச்சல பிரதேசம் எப்பொழுதுமே இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி என்று தெளிவுப்படுத்தியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

**பி.ஆர்.கவாய்**

**உச்சநீதிமன்றத்தின் 52-வது தலைமை நீதிபதியாக** பி.ஆர்.கவாய் இன்று பொறுப்பேற்றார்.

குடியரசு தலைவர் மாளிகையில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவருக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

நீதிபதி சஞ்சீவ் கண்ணா நேற்று பணியிலிருந்து ஓய்வு பெற்றதையடுத்து பி.ஆர்.கவாய் நாட்டின் தலைமை நீதிபதியாக பொறுப்பேற்றார்

குடியரசு துணைத்தலைவர் திரு.ஜக்தீப்தன்கர், பிரதமர். திரு. நரேந்திரமோடி, மத்திய அமைச்சர்கள் உச்சநீதிமன்ற நீதிபதிகள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖❖❖

**சந்திரசேகர் பெம்மசானி**

**உலகளாவிய துரித 5-ஜி அலைக்கற்றை** தொழில்நுட்ப வசதியை இந்தியா எட்டியுள்ளதாக மத்திய தொலைத்தொடர்பு ஊரக மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. சந்திரசேகர் பெம்மசானி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் பாரத் 6-ஜி சர்வதேச மாநாட்டில் இன்று உரையாற்றியஅவர், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் 5-ஜி தொழில்நுட்பம் நம்நாட்டில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டார்.

5-ஜி தொழில்நுட்பம் நாட்டின் 80 சதவிகித மக்களை சென்றடைந்ததாகவும், இதன்மூலம் அதிவேக இணையதள செயல்பாடு ஊரக பகுதிகளில் கொண்டுவரப்பட்டதாகவும் அவர் கூறினார்.

தரம், சேவை, மின்னணுதொழில்நுட்பம் போன்றவற்றை குடிமக்களுக்கு 4ஜி, 5ஜி தரவுகள் உறுதி செய்ததாகவும் அவர் எடுத்துரைத்தார்.

எதிர்கால சந்ததியினருக்கு உதவும் வகையிலான மாபெரும் தொழில்நுட்ப புரட்சியின் நுழைவாயிலில் இந்தியா தற்போது நிற்பதாக அமைச்சர் பெருமிதம் தெரிவித்தார்.

6ஜி தொழில்நுட்ப பாதையில் முன்னோடி நாடாக விரைவில் இந்தியா உருவெடுக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

**முதலமைச்சர்**

**உதகை அரசு** மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு தேவையான வசதிகள் உடனடியாக செய்துதரப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

உதகையில் இன்று இம்மருத்துவமனையை ஆய்வுசெய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த மாதம் 6-ம் தேதி திறக்கப்பட்ட இந்த மருத்துவமனை பெரும் வரவேற்பை பெற்றுள்ளதாக அவர் கூறினார்.

தினசரி ஆயிரத்திற்கும் மேற்பட்ட புறநோயாளிகள் சிகிச்சை பெற்றுவருவதாக அவர் எடுத்துரைத்தார்.

**C.T. Scan, MRI Scan** உள்ளிட்ட நவீன வசதிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளதை சுட்டிக்காட்டியஅவர், இதனால் ஏழை எளிய மக்கள் எவ்வித கட்டணமுமின்றி பயன்பெற்று வருவதாக எடுத்துரைத்தார்.

உதகை அரசு தாவரவியல் பூங்காவில் 127-வது மலர் கண்காட்சியை நாளை முதலமைச்சர் துவக்கி வைக்கவுள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்…….

……வாய்ஸ்….

மலர் கண்காட்சியை முன்னிட்டு மாவட்டத்திற்கு நாளை உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

**உதயநிதி**

**தமிழகத்தில் அரசு பணியில் சேரும்** மாணாக்கருக்கு அனைத்து பயிற்சிகளையும் வழங்க மாநில அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக துணைமுதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் நான்முதல்வன் திட்டத்தின்கீழ் கல்லூரி கனவு திட்டத்தை சென்னையில் இன்று துவக்கிவைத்து பேசியஅவர், இத்திட்டத்தால் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மாணாக்கர் கல்லூரியில் சேர்ந்து வருவதாக கூறினார்.

……வாய்ஸ்……..

இந்நிகழ்வின் போது மத்திய மாநில அரசின் போட்டித் தேர்வுகளின் வெற்றியாளர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை அவர் வழங்கினார்.

அமைச்சர்கள் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திரு. மா.சுப்ரமணியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மதுரையில் இத்திட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. சங்கீதா துவக்கிவைத்து கல்லூரி கனவு குறித்த வழிகாட்டுதல் கையேடுகளை மாணாக்கருக்கு வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖

**கீதாஜீவன்**

**தமிழ்நாட்டில் 108 கோடி** ரூபாய் செலவில் பணிபுரியும் மகளிருக்கான 10 விடுதிகள் கட்டப்படும் என்று மாநில சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி ஆசிரியர்காலனி பகுதியில் மறுசீரமைக்கப்பட்ட தோழி விடுதியை இன்று திறந்துவைத்து பேசியஅவர், இவ்விடுதிகள் மூலம் பெண்களுக்கு பாதுகாப்பான சூழல் ஏற்படுத்தப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

மாநிலம் முழுவதும் குறைந்த கட்டணத்துடனும் தரத்துடனும் இவ்விடுதிகள் செயல்படுவதாக எடுத்துரைத்தார்.

இந்நிகழ்வில் 98 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்களை அமைச்சர் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖❖

**இருவரி**

**சேலம் மாவட்டத்தில் அனைத்து வட்டாட்சியர்** அலுவலகங்களிலும் இன்றுமுதல் வரும் 22-ம் தேதிவரை வருவாய் தீர்வாயம் நடைபெறும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. பிருந்தாதேவி தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் பட்டாமாறுதல், இலவச வீட்டுமனை பட்டா, வாரிசுசான்று, மாற்றுத்திறனாளி உதவித் தொகை உள்ளிட்டவை தொடர்பாக விண்ணப்பித்து பயன்பெறலாம்.

**நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு** ஏ.இடையமங்கலத்தில் இன்றும்,

எருமப்பட்டி என்.புதுக்கோட்டையில் வரும் 21-ம் தேதியும் நடைபெறும் சிறப்பு மண் பரிசோதனை முகாமை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமெனற மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் உமா அறிவுறுத்தியுள்ளார்.

**சிவகங்கை மாவட்டத்தில் நடமாடும் கால்நடை** மருத்துவ ஊர்திகள் பயன்பாட்டில் உள்ளதாகவும், இதில் குடற்புழு நீக்கம் செய்தல், தடுப்பூசி போடுதல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப் படுவதாகவும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷாஅஜித் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

**கோவில்**

**கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர் பேட்டை** கூத்தாண்டவர் திருக்கோவில் தேரோட்டம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

இதுகுறித்து எமது செய்தியாளர்….

….. வாய்ஸ்….

❖❖❖❖❖❖❖❖❖

**வானிலை**

**வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக** கோவை, திருப்பூர், நீலகிரி, ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

நாளை கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர், வேலூர் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

**பேட்மிட்டன்**

**தாய்லாந்து ஓப்பன் பேட்மிட்டன் போட்டியின்** மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் ஆகர்ஷி கஷ்யப், உன்னத்தி ஹூடா ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

முதல் சுற்று ஆட்டங்களில் கஷ்யப் - ஜப்பானின் **சுகியாமாவையும்**,

உன்னத்தி ஹூடா - தாய்லாந்தின் **தமோன்வானையும்** இன்று வென்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖❖❖❖